# ஆக்டோபஸ் மோதிர ஸ்டாண்ட்

## ஈஸியா செய்யுங்க... வீட்டை அழகாக்குங்க...




### தேவையான பொருட்கள்:

எம்.சீல்: தேவையான அளவு
முகப்பவுடர்: தேவைக்கு
ரோப் ஸ்பிரிங்: தேவைக்கு
பிரஷ்: தேவைக்கு
பேப்ரிக் பெயிண்ட்: தேவைக்கு
தண்ணீர்: தேவையான அளவு
கத்திரிக்கோல்: தேவைக்கு



### செய்முறை:

நமக்கு எவ்வளவு நீளம் தேவையோ அந்தளவுக்கு ரோப் ஸ்பிரிங்கை துண்டாக்கிக் கொள்ளவும். இப்போது எம்.சீலை எடுத்துக் கொண்டு அதிலிருக்கும் இரண்டு கலர்களும் ஒரேயளவாக வருவது போல் துண்டாக்கிக் கொண்டு



கையில் முகப்பவுடரைக் கொட்டி பிசைந்துக் கொள்ளவும். பிசைந்த எம்.சீலை உருண்டையாக உருட்டிக் கொண்டு அதை தரையில் வைத்து அடிப்பகுதி தட்டையாக வருவது போல செய்யவும். அதில் இரு கண்களாக பிசைந்த எம்சீலையே வைக்கவும்.

இப்போது உருண்டையில் பேனா அல்லது பென்சிலால் ஆங்காங்கு சிறிது துளைகள் போட்டு, அதில் ஸ்பிரிங்கை நுழைக்கவும். ஸ்பிரிங்கை நுழைத்தபிறகு இருக்கும் இடைவெளியை எம்.சீலால் அழுத்தி இறுக்கமாக ஸ்பிரிங் இருப்பதுபோல் வைக்கவும்.

எம்.சீல் காய்ந்த பிறகு அதில் பேப்ரிக் பெயிண்ட் அடித்து இன்னும் சற்றுநேரம்





காயவிடவும். இப்போது அழகான மோதிர ஸ்டாண்ட் தயார்.

### இதை செய்யும் போது கவனிக்க வேண்டியவை:

- எம்.சீலை நமக்கு தேவையான அளவிற்கு மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் உலர்ந்து விடும்.

★ இதை ஆக்டோபஸ் மாதிரி மட்டும் செய்ய வேண்டுமென்பதில்லை. நமக்கு பிடித்த வடிவத்தில் செய்து கொள்ளலாம்.

★ ஸ்பிரிங் ரோப் மெல்லியதாகவும், கொஞ்சம் கடினமாகவும், பல நிறங்களிலும் கிடைக்கிறது. நமக்கு எப்படி தேவையோ அதற்கு தகுந்தாற் போல் பார்த்து வாங்கிக் கொள்ளவும்.

